விறகு பற்றாக்குறை

* 645 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் விறகுப் பற்றாக்குறை இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதைப்போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ) இல்லை.

(இ) வினா எழ இடம் இல்லை.

Cancer

* 646 *Q.*—Sri V. S. S. MANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) what is the incidence of Cancer Cervix and Cancer body uterus in the Erskine Hospital, Madurai;

(*b*) whether any Radium was supplied to that hospital for treatment; if not the reasons therefor;

(*c*) the ratio of incidence of Cancer Cervix cases in Madurai Hospital when compared to Madras Maternity Hospital, Egmore for Radium treatment; and

(*d*) the measures taken so far to, supply Radium to Madurai Hospital?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM:

(*a*) The incidence of cancer cervix and cancer body uterus ranges from 4.22 to 4.74 per cent and from 0.02 to 0.08 per cent respectively.

(*b*) Radium needles supplied to the hospital in 1956 are being used for treatment of cancer. For want of radium tubes, they have not been supplied to the institution for treatment of Cancer cervix.

(*c*) The ratio is about 2 :5.

(*d*) The question of purchasing radium tubes was examined and given up as it involved considerable expenditure. The Government have decided that old and broken radium needles of 392.83 mgms. should be got repaired and remade by the Chemical Service Company, London. The needles are being despatched to the firm.

Degree course in Nursing

* 647 *Q.*—Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are in receipt of a resolution from the Government Nurses' Association urging for the starting of degree courses in Nursing leading to B.Sc. and M.Sc. qualifications; and

23rd July 1964]

(b) if so, the action taken theron?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இது சம்பந்தமாக ஒரு தீர்மானம் மருத்துவத் துறை டைரக்டருக்கு வந்துள்ளது.

(இ) அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மூலிகைப் பண்ணை

*650 **கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலம், கொடைக்கானல், ஏற்காடு முதலிய இடங்களில் உள்ளதுபோல கொல்லிமலையில் ஒரு மூலிகை கூட்டுப்பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?

(இ) தனியார்களுக்கு மூலிகைப் பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: தலைவர் அவர்களே, கொல்லிமலை பகுதிகளில் மூலிகைகள் கிடைக்கின்றன என்று புலவர்கள்கூட, எழுதியிருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு பண்ணையை நல்ல முறையிலே அமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அதைக் குற்றாலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே, மற்ற இடங்களில் வைக்கலாமா என்பதைப் பற்றி ஆராய சந்தர்ப்பம் இல்லை.

கிராமக் குடிதண்ணீர்த் திட்டம்

*651 **கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் கிராமங்களில் ஏற்படும் தொத்து நோய்களைத் தடுப்பதற்கு ஐந்து மைல் சுற்றளவில் உள்ள பல கிராமங்களை இணைத்து ஒரே இடத்தில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டத்தை உருவாக்கி விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா?

(இ) மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலுகா, பாலமேடு பிர்க்காவில் மேலே கூறிய இணைப்புத் திட்டம் வேண்டுமென்று சோழவந்தான் தொகுதி எம்.எல்.ஏ. இடமிருந்து அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் வந்ததா?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) அத்தகைய திட்டம் எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.